தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஏப்ரல் 10, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"*

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேசமாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

31—

வாக்குச் சாவடி

***18318—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 10

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், எறவார்பட்டி ஊராட்சி, கவுல்பட்டியில் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்து முடிக்கப்பட்டபின், வாக்குச் சாவடிகளை மறுசீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன், இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், கவுல்பட்டி கிராமம் சுமார் 500 வாக்காளர்களைக் கொண்ட கிராமமாகும். அங்கிருந்து எறவார்பட்டிக்கு 2 கிலோ மீட்டர் நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மறுபரிசீலனை செய்து கவுல்பட்டி கிராமத்தில் வாக்குச் சாவடி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற இந்தக் கேள்விக்குத்தான் முதலிலேயே அளிக்கப்பட்ட விடை—தொகுதிகள் சீரமைப்புப் பணி நடைபெறுகிறது; எது தொகுதி; எந்த அளவு அந்தத் தொகுதி; எந்தெந்த வட்டாரத்திலே உள்ள மக்கள் வாக்களிப்பார்கள் என்பதெல்லாம் தீர்மானிக்கப்பட்டதற்குப் பின்னர், வாக்குச் சாவடி, அதிலே வாக்களிக்கிற மக்களுடைய எண்ணிக்கை, அவை பற்றி அதற்குப் பின்னர்தான் ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

2007 ஏப்ரல் 10]

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சீரமைப்புப் பணி முடிந்த பின்பு இந்தப் பணி தொடர்ந்து நடைபெறுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்தினுடைய பொறுப்பில் தொகுதிச் சீரமைப்பு இப்போது நடைபெறுகிறது. அதற்குப் பின்னர் தேர்தல் ஆணையம் ஒவ்வொரு தொகுதியிலேயும் வாக்குச் சாவடிகளைத் தீர்மானிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்மூலமாக வரைமுறைகளை அப்பொழுதுதான் வெளியிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளை வரையறை செய்ததற்குப் பின்னாலே, புதிதாகத் தனி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதி வரையறைகளைப் பற்றிய கருத்துகள் தமிழகத்திலே பரவலாகப் பேசப்படுகின்றன. நாடாளுமன்றத் தொகுதி, சட்டமன்றத் தொகுதிகள் வரையறை என்பது சரியான நிலையிலே செய்யப்படவில்லை. ஏற்கெனவே இருக்கிற சட்டமன்றத் தொகுதிகளும் அந்த மாதிரியாக இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், இப்பொழுது வரையறை செய்வது என்பது, பலவாறாகப் பிரித்து, வெவ்வேறு தொகுதிகளிலே, நாடாளுமன்றத் தொகுதிகளிலே இணைக்கப்படுகின்றன, குறிப்பாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்த நன்னிலம் சட்டமன்றத் தொகுதி தஞ்சாவூருக்கு மாறிவிட்டது. இதற்கும், அதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. 100 கிலோ மீட்டருக்கு மேலே தூரம் இருக்கிறது. ஆனால், அருகிலே 30 கிலோ மீட்டரில்தான் நாகப்பட்டினம் தொகுதி இருக்கிறது. எப்படி இந்த மாதிரியாக வரையறைகள் மாறுகின்றன என்பது தெரியவில்லை. இதைப் பற்றிய கருத்துகள் வலுவாக வருகிறபோது, இதில் நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி, சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதி வரையறைகளை ஒருமுகப்படுத்தி, மக்கள் பாதிக்காதவண்ணம் அல்லது பயன்படுகிற வகையிலே சரியாக அமைப்பதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வரையறை என்பது தேர்தல் ஆணையத்தினுடைய பொறுப்பில், அதற்காக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் போன்ற ஓர் அமைப்பு, அதை நிறைவேற்றுகிறது. அந்தத் தொகுதி அமைப்புகளைப் பற்றி பொது மக்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அண்மையிலே ஓர் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அமைப்பு சார்பாக, பொது மக்களுடைய கருத்தை அவர்கள் அறிவார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ, பொது மக்களுடைய பிரதிநிதிகளோ, பஞ்சாயத்துத் தலைவரோ, யாராக இருந்தாலும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், தொகுதிகள் அமைக்கப்படுகிறபோதே, அதற்கென்று ஒரு அடிப்படை இலக்கணம், வடக்குத் திசையிலேயிருந்துதான் ஒரு மாவட்டத்திற்குள் தொகுதிகளைப் பிரித்துக்கொண்டு செல்ல வேண்டும். தொகுதிகளில் ஒவ்வொரு ஒன்றியமும் கூடுமானவரையில் முழு அளவில் மொத்தமாக இடம் பெற வேண்டும். இப்படி அதற்குமேல் மக்கள் தொகை அடிப்படையிலேயும், வாக்காளர் அடிப்படையிலேயும் ஏறத்தாழ ஒரே அளவாக, சமச்சீராக அமைய வேண்டும். இவையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்கக்கூடிய கொள்கைகள். அவற்றை நிறைவேற்றுகிறபோது ஏதேனும் குறைபாடு இருக்குமானால், பொது மக்கள் சார்பாகத் தெரிவிக்கப்படுகிற அந்த ஆலோசனைகளைச் சட்டமன்ற உறுப்பினரும் அந்தக் குழுவிற்குத் தெரிவிக்கலாம். அது ஏடுகளிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

32—

துணை மின் நிலையம்

***334—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—